**செ.வெ.எண்: 49** **நாள்:29.11.2018**

## அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை சார்பில் சிறப்பு பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (29.11.2018) நடைபெற்றது.

இச்சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அரியலூர் கோட்டத்திற்கு உட்பட்ட பொதுமக்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சாதிச்சான்றுகள் வழங்குதல், ‘‘அ’’ பதிவேடு கணினிமயமாக்கல் பணியின்போது ஏற்பட்டுள்ள தவறுகள் / விடுதல்கள் தொடர்பான குறைகள், பட்டா மாறுதல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறுவது தொடர்பான பல்வேறு குறைகள் (குறிப்பாக மாற்றுத்திறனாளி மனுதாரர்களின் குறைகள்), வாரிசு சான்று வழங்குவது தொடர்பான பொதுமக்களின் குறைகள் / கோரிக்கைகள் அடங்கிய 58 மனுக்கள் பெறப்பட்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஜெ.பாலாஜி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பூங்கோதை, அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**